<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

OS. 77/2021

Deposition of Witness : DW 1

Name : அண்ணாதுரை (வயது – 64)

Father's Name /W/o : த/பெ ஏழுமலை

Religion : இந்து

Caste : –

Calling : –

Address : களத்தூர்

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 22.07.2025.

## <u>குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு படிக்க தெரியும். என்னுடைய பிரமாண வாக்குமூலம் படித்து புரிந்து தான் கையெழுத்து இட்டேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 2 ஆம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் அவர் என்னுடைய பெரியப்பா பெயர் ஆறுமுகம். மேற்படி வழக்கை வாதி எதற்காக தாக்கல் செய்தார் என்றால் சொத்து விற்க கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. 10.11.2021 தேதியில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு பி.சா.ஆ– 5 வந்ததா என்றால் வந்தது. எதற்காக வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால் சொத்தை விற்க கூடாது என்றும் 3 வருடத்திற்கு என்கு குத்தகைக்கு விட்டார்கள் என்றும் ஆனால் 3 வருடத்திற்கு கொடுக்கவில்லை என்று அனுப்பினார். வழக்கறிஞர் அறிவிப்பு பி.சா.ஆ – 5 க்கு நான் பதில் அனுப்பினேனா என்றால் நான் பதில் அனுப்புவதற்குள் வாதி வழக்கு தாக்கல் செய்துவிட்டார்.

3. இந்த வழக்கில் நான் எப்போது பிரதிவாதியாக சேர்க்கப்பட்டேன் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு போதிய அவகாசம் இருந்தும் நான் வழக்கறிஞர் அறிப்புக்கு பதில் அளிக்கவில்லை என்றால் நான் 2 ஆம் வாதியிடம் அவகாசம் கேட்டுகொண்டிருந்தேன் அதற்குள் வாதி என் மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1,2 ஆம் பிரதிவாதிகள் எனக்கு சொத்து தருவதாக எழுதி தந்தார்களா என்றால் இல்லை. மனுதாரர் அளித்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு நான் பதில் அளிக்காத காரணத்தினால் நான் மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விபரங்களை நான் ஒப்புக்கொண்டேன் என்றால் இல்லை. தாவா சொத்தில் ஏதாவது வேலி போட்டுள்ளதா என்றால் இல்லை.

4. தாவா சொத்தில் யார் வேண்டுமானாலும் சென்று வருவார்களா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ– 3 தாவா சொத்தின் ஆவணம் என்றால் சரிதான். என் பிறந்த தேதி என்னவென்றால் எனக்கு 63 வயதாகிறது தேதி ஞாபகமில்லை. தாவா சொத்தின் ஆவணம் பி.சா.ஆ– 3 எப்போது பதிவு செய்யப்பட்டது என்றால் 1956 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் எனக்கு 7 வயது இருக்கும் என்றால் சரியல்ல. 1956 ஆம் ஆண்டில் நான் பிறக்கவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

5. தாவா சொத்து சம்பந்தமாக எந்த விஷயமும் எனக்கு தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என் தந்தை சொல்லி எனக்கு தெரியும். 2 ஆம் வாதியின் தந்தை பெயர் என்னவென்றால் ஆறுமுகம் என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ– 3 ஆறுமுகம் பெயரில் பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். தாவா சொத்து ஆறுமுகத்திற்கு உரிமையானது என்றால் சரியல்ல. ஆறுமுகத்தின் மனைவி பெயர் என்னவென்றால் பாஞ்சாலை. தாவா சொத்தின் ஆவணம் எப்போதிலிருந்து என்னிடம் உள்ளது என்றால் என் தந்தை காலத்தில் அவரிடம் அவரின் இறப்பிற்கு பின் என்னிடம் உள்ளது.
என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 30.12.2009.

6. என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தந்தையின் இறப்பு சான்றிதழ் என்றால் சரிதான். என் தாயார் பெயர் என்னவென்றால் பூபதியம்மாள். என்னிடம் காட்டப்படும் வாரிசு சான்றிதழ் என் தாயார் பூபதி என்பவருடையதா என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் என் தந்தை ஏழுமலையின் வாரிசு சான்றிதழ் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 இல் மேலே ஏழுமலை என்று தலைப்பு உள்ளது என்றாலும் அவர் என் தந்தை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 இல் ஏழுமலை களத்தூர் என்ற பெயர் கருப்பு மையால் எழுதப்பட்டது என்றாலும் கீழே இருக்கும் சங்கதிகள் நீல நிற மையால் எழுதப்பட்டது என்றால் சரிதான்.

7. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 என் வசத்தில் உள்ளது என்பதற்காக அந்த தாவா சொத்து என்னுடையது ஆகாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ – 3 இல் ஏழுமலை களத்தூர் என்ற பெயர் கருப்பு மையால் எழுதப்பட்டது என்றாலும் கீழே இருக்கும் சங்கதிகள் நீல நிற மையால் எழுதப்பட்டது என்றால் இரண்டும் மாறு பட்ட நிறங்களில் உள்ளது என்றால் கருப்பு நிற மை பத்திரம் வாங்கும்போது கொடுப்பவர் எழுதியது. நீல நிற மை பத்திரம் பதிவு செய்யும்போது எழுதியது.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**